பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 ஆனி 22 றஜப் 18 இதழ்: 145
யாழ்ப்பாணம் புதன்கிழமை 6-7-77

# செம்மணி கொலை வழக்கு அனுராதபுரத்துக்கு மாற்றம்!

யாழ்ப்பாணம், புதன்

செம்மணி கொலைவழக்கு, யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்திலிருந்து அநுராதபுரம் மேல்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

இவ்வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 76-ம் ஆண்டு ஆகஸ்ட் 10-ம்தேதி செம்மணியில் சாவகச்சேரி வங்கி ஊழியரான பொன்னம்பலம் பரராசாவைச் சுட்டுக் கொலை செய்ததாக, யாழ்ப்பாணம் பொலிஸ் கான்ஸ்டபிள் டபிள்யு. எஸ். ஸ்ரான்லிமீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிக்கு குற்றப்பத்திரிகையும், சாட்சிகளின் வாக்குமூலங்களும் வழங்கப்பட்டது.

எதிரியிடம் சிங்களம் பேசும் ஜூரியா? தமிழ் பேசும் ஜூரி வேண்டுமா? எனக் கோட்டார் கேட்டபோது, சிங்களம்பேசும் ஜூரி வேண்டும் என தெரிவித்தார்.

அரச சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் இவ்வழக்கை

(6-ம் பக்கம் பார்க்க)

# பாகிஸ்தானில் ராணுவப்புரட்சி:

# பூட்டோவுக்கு தடுப்புக்காவல்!

## நாட்டின் நலன் கருதியே புரட்சி நடந்ததாக அறிவிப்பு

### தேசியப் பேரவை, சட்டசபை கலைப்பு; நாடுமுழுவதும் ராணுவச்சட்டம் பிரகடனம்

இஸ்லாமாபாத், ஜூலை 5

**பாகிஸ்தானில் இன்று ஏற்பட்ட திடீர் இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து ஆட்சியை இராணுவம் கைப்பற்றியுள்ளது. பிரதமர் பூட்டோவும், சகல அமைச்சர்களும், மற்றும் ஆளும்கட்சி, எதிர்க்கட்சித் தலைவர்களும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.**

ஆட்சியைக் கைப்பற்றியுள்ள இராணுவத் தளபதி ஜெனரல் ஸியாவுல் ஹக், நாடு முழுவதும் இராணுவச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தியுள்ளார்.

## நாட்டு மக்களுக்குச் செய்தி

இராணுவத்தளபதி ஸியாவுல் ஹக், இன்றிரவு (இலங்கை நேரப்படி 7-30க்கு) டெலிவிஷன், வானொலி மூலமாக முதற்தடவையாக நாட்டுமக்களுக்கு 'திடீர்ப் புரட்சியின் அவசியம்' பற்றிச் செய்தி விடுத்தார்.

''அமைதியான முறையில் நாட்டு நிர்வாகத்தை இராணுவம் பொறுப்பேற்றிருப்பதற்கு முக்கிய காரணம்; கடந்த மார்ச்சில் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நாட்டில் தலைதூக்கிய அரசியல் நெருக்கடி தான். நாட்டுமக்கள் மிகவும் அமைதியாகவும், அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடாமலும் இருக்க வேண்டும். ஆட்சியில் நாம் தொடர்ந்து இருக்கமாட்டோம். மக்களாட்சிக்கு இடமளிக்கும்வகையில் திட்டமிட்டபடி இவ்வருடம் அக்டோபர் மாதத்தில் தேர்தல் நடைபெறும். எந்ததனிப்பட்ட நபருக்கோ அல்லது கட்சிக்கு எதிராகவோ புரட்சி நடக்கவில்லை. நாடு-நாட்டு மக்களின் நலன்கருதியே இத்திடீர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேசிய பேரவையும், மாகாணசட்ட சபைகளும் உடனடியாகக் கலைக்கப்படும். நாட்டின் தலைவராக ஜனாதிபதி சௌத்திரி தொடர்ந்து இருப்பார். இவருக்கு உதவியாக இராணுவச் சபையொன்று பணியாற்றும்'' என்று தமது செய்தியில் இராணுவத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் ஸியாவுல் ஹக், உருது மொழியில் பதினைந்து நிமிடம்வரை நாட்டு மக்களுக்கு டெலிவிஷன், வானொலியில் உரைநிகழ்த்தினார்.

### திடீர்புரட்சி

திடீர் இராணுவப் புரட்சி திங்கட்கிழமை நள்ளிரவு ஆரம்பமாகி, செவ்வாய்க்கிழமை அதிகாலை முடிந்தது என்றும், இக்கால எல்லைக்குள் பிரதமர் சூல்பிகார் அலி பூட்டோவும், அமைச்சர்களும், ஆளும் மக்கள் கட்சித் தலைவர்களும், எதிர்க்கட்சி கூட்டணித் தலைவர்களும் கைதுசெய்யப்பட்டு பாதுகாப்பான முறையில் காவலில் வைக்கப்பட்டனர் என்றும், இப்புரட்சியின்போது இரத்தம் சிந்தப்படவில்லை என்றும் சகல கேந்திர ஸ்தானங்களிலும் இராணுவம் காவல் புரிந்துவருவதாகவும் பாகிஸ்தான் வானொலி அறிவித்தது,

### பிரதமர் பூட்டோ

பிரதமர் பூட்டோ, இஸ்லாமாபாத்திலிருந்து 36 மைல் தூரத்தில் பத்திரமான இடத்தில் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### வழக்கமான சேவைகள்

இன்று இரவு வெளியான பாகிஸ்தான் வானொலி செய்திகளின்படி, நாட்டில் வழக்கமான சேவைகள் நடைபெறுவதாகவும் மக்களும் பயமின்றி நடமாடுவதாகவும் வெளிநாட்டு- உள்நாட்டு விமானச் சேவைகளும் வழமைபோல் நடப்பதாகவும் தெரிவித்தன. பிரதமர் வாசஸ்தலத்தில் மட்டும் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி மாளிகை வழமைபோல் இயங்குவதாகவும் செய்திகள் தெரிவித்தன.

மாகாண கவர்னர்களும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் கடந்த நான்கு மாதங்களாக இருந்து வரும் அரசியல் நெருக்கடி தீர்வு காணும் பொருட்டு பாக் பிரதமர் ஜனாப் பூட்டோவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர்களுக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற்று இணக்கம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ள வேளையில் இத்திடீர் ராணுவப் புரட்சி இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் ஜனாப் பூட்டோவின் ஆளும் மக்கள் கட்சி வெற்றிபெற்றபோதிலும் அத் தேர்தலில் ஊழல் இடம்பெற்றதாகக் கூறிய

[6ம் பக்கம் பார்க்க]

## வடபகுதியில் 6800 பேர் தபால் மூலம் வாக்களிப்பு

யாழ்ப்பாணம், புதன்

தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்தவர்களுக்கு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் வைத்து தபால் வாக்குச் சீட்டுகள் விநியோகிக்கப்பட்டன.

வடமாகாணத்தைச் சேர்ந்த 11 தொகுதிகளிலும் சுமார் 6800 வாக்காளர்கள் தபால் மூலம் தங்கள் வாக்குகளைச் செலுத்துவதற்குப்பதிவு செய்துள்ளனர்

யாழ்ப்பாண அரசங்க செயலகத்திற்கு வாக்குச்சீட்டுக்கள் யாவும் பலத்த காவலுடன் கடந்த ஞாயிறன்று கொழும்பிலிருந்து லொறிமூலம் எடுத்து வரப்பட்டன.

அங்கவீனர்கள் நோயாளிகள் வாகனவசதி வேண்டி அரசாங்கத்திற்கு விண்ணப்பிப்பதற்கான கடைசித்திகதி எதிர்வரும் 14-ம் திகதியாகும். இதற்கான விண்ணப்பப்படிவங்கள் பிரதேசஅரசாங்க அலுவலகங்களின் மூலம் வழங்கப்படுகிறது. விண்ணப்பப்படிவத்தில் சுகவீனத்திற்கான காரணமும் அதற்கான அரசாங்க அல்லதுசுதேச வைத்தியரின் அத்தாட்சிப்பத்திரமும் சமர்ப்பிக்கப்படல்வேண்டும்.

இம்முறைத்தேர்தலில் வாக்காளரின் இடது கைசின்னவிரலில் மைபூசப்படவுள்ளது. இடதுகைச்சின்னவிரலைஇழந்தவர்களுக்கு வேறு விரல்களில் மைபூசுவதற்குத்தேர்தல்சட்டம் வகைசெய்கின்றது.

வாக்களிப்பின்போது ஒருவருடைய வாக்கை இன்னொருவர் பயன்படுத்திய பின்பு வாக்குச்சீட்டுக்குரியவர் வாக்களிக்கவந்தால் அவருக்கு பச்சைநிற வாக்குச்சீட்டுஒன்று வழங்கப்படும். இத்தகைய வாக்குச்சீட்டுக்கள் கணக்கெடுப்பின்போது எண்ணப்படமாட்டா. ஆனால் நீதிமன்றம் மீள எண்ணுவதற்குக் கட்டளையிடும் பட்சத்தில் அவ்வாக்குச்சீட்டுக்கள் கணக்கில் கொள்ளப்படும்.

மேலும் ஒருவர் வாக்களிக்கும் பொழுது வாக்குச்சீட்டில் அடையாளமிடுகையில் பழுது ஏற்படின் அத்தகைய வாக்குச்சீட்டை அதிகாரியிடம் ஒப்படைத்துப் புதிய வாக்குச்சீட்டைப் பெறலாம். ஆனால் அத்தகைய வாக்குச்சீட்டு எக்காரணத்தால் பழுதடைந்தது என்பதை அத்தாட்சியுடன் உறுதிப்படுத்தவேண்டும். [கி]

## ஷேக் அப்துல்லா கட்சி பெரும் வெற்றி

ஸ்ரீநகர், ஜூலை 5

ஜம்மு- காஷ்மீர் சட்டசபைத் தேர்தலில், ஷேக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சி பெரும் வெற்றியீட்டியுள்ளது.

சட்டசபையின் மொத்த ஆசனங்கள் 76. இன்று இரவு வரை 71 தொகுதிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுவிட்டன. தேசிய மாநாட்டு கட்சி 44 தொகுதிகளையும் ஜனதா 13 தொகுதிகளையும் காங்கிரஸ் 10 தொகுதிகளையும் கைப்பற்றியுள்ளன. சுயேச்சையாளர்கள் 04 பேர் வெற்றி பெற்றுள்ளனர். 05தொகுதிகளின் முடிவுகள் இன்னமும் அறிவிக்கப்படவேண்டும்.

## சபாநாயகர் முனு ஆதி?

சென்னை, ஜூலை 5

தமிழக சட்டப்பேரவையின் புதிய சபாநாயகராக திரு முனு ஆதி தெரிவு செய்யப்படலாம் என்றும் திரு. எஸ் திருநாவுக்கரசு துணை சபாநாயகராகத் தெரிவு செய்யப்படலாமென்றும் தெரியவருகிறது.

புதிய சபாநாயகர், துணை சபாநாயகர் தேர்தல் நாளை புதன்கிழமை நடைபெறுகிறது.

## மாவட்ட ரீதியில் அமைச்சர்கள்

ஜே. ஆர்.

பதுளை, செவ்.

'ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டத்திலேயே தங்கியிருக்கும் ஒரு எம். பி. அமைச்சராக நியமிக்கப்படுவார். அந்த மாவட்டத்திற்கு அந்த அமைச்சரே முழுப் பொறுப்பாக இருப்பார். இந்த ஏற்பாடு, மக்கள் அமைச்சர்களைச் சந்திக்க கொழும்பு செல்லும் பயணத்தை முற்றாக ஒழிக்கும்.'

[6ம் பக்கம் பார்க்க]

**மணிவாக்கு**

ஓர் உண்மைப் பக்தனுல் செய்யமுடியாத காரியம் ஒன்றுமேயில்லை.

— காந்திமகான்

ஈழநாடு
THE EELANAADU

# தமிழர் பிரச்னை

"ஸ்ரீறிலங்கா சுதந்திரக் கட்சி தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் ஆட்சி அமைத்ததும் தமிழ் மக்களின் பிரச்னைகளைத்தீர்த்து வைப்போம்" என்று பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா சிலதினங்களுக்கு முன் கிளிநொச்சியில் நடந்த ஒருபொதுக்கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

வாக்குகளைப் பெறுவதற்காக இதைக்கூறவில்லைஎன்றும் மனந்திறந்து உண்மையாகவே இதைச்சொல்வதாகவும் பிரதமர் கூறியிருக்கிருர்.

"நாம்ஆட்சிக்குவந்ததும் முதல்வேலையாக சிறுபான்மையினர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண நடவடிக்கை எடுப்போம். இந்நாட்டில் வாழும் தமிழ்,சிங்கள, முஸ்லிம், பறங்கியர் ஆகிய அனைவரும்பீதியின்றி வாழக்கூடிய நிலையைத் தோற்றுவிப்போம்" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன யடடிநுவர உடுநுவரத் தொகுதிகளில் தேர்தல் பிரச்சாரக்கூட்டங்களில் தெரிவித்திருக்கிருர்.

ஐக்கிய இடதுசாரி முன்னணித் தலைவர்களும் தாங்கள் ஆட்சிக்குவந்தால் தமிழர் பிரச்னைகளுக்கு நிரந்தரத்தீர்வு காணப்போவதாகத் தெரிவித்து வருகின்றனர்.

1956ம் ஆண்டுமுதல் ஒவ்வொருதேர்தலிலும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த, ஆட்சிபீடம் ஏறுவதற்கான போட்டியில் ஈடுபடும் அரசியல் கட்சிகள் தமிழ்மக்களின் உரிமைகளைப் பறிப்பதில் தான் போட்டிபோட்டுக்கொண்டு வந்திருக்கின்றன.

மொழிப்பிரச்னை தீர்ந்துவிட்டது. சிறுபான்மையினர் பிரச்னை என ஒன்று இல்லையென்று கூறியகாலம் போய் தமிழர் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்போம் என்று இந்த அரசியல் கட்சிகள் தமிழருக்குஉரிமைவழங்குவதற்கு இந்தத் தேர்தலில் போட்டிபோடுவது ஆச்சரியம்தான். ஆனுலும் பிரிவினை என்ற குரல் எழுப்பப்பட்டிருக்காவிட்டால் ஐக்கிய இடதுசாரி முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரதேசசுயாட்சி என்ற வாக்குறுதியும சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் தமதுதேர்தல் விஞ்ஞாபனங்களில் தமிழர் பிரச்னையைத் தீர்க்கப்போவதாகவும் குறிப்பிடும் வாசகங்கள் இடம் பெற்றிருக்குமா என்பதுசந்தேகமே!

தமிழ்மக்களின் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு அமைச்சர் செல்லையா குமாரசூரியர் தம்மைத் தூண்டிவந்ததாகப்பிரதமர் கிளிநொச்சிக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

ஆட்சிபீடத்துக்கு வரும் வாய்ப்பைப் பெற்றுள்ள பெரும்பான்மைக் கட்சிகளில் அங்கம் வகிக்கும் தமிழ் பேசும்மக்கள் தமது சமூகத்தின் குறைபாடுகளை எடுத்துக்கூறி நிவாரணம் தேடமுன்வருவதுஅவசியம்.

என்ருலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் தமிழர் பிரச்னைகளுக்கு எப்படியான தீர்வு காண்பதற்குத் திட்டமிட்டுள்ளன வென்பதைத் தங்களதுகொள்கைத்திட்டமான தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஏன் திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லையென்பது தமிழ்மக்களின் மனதில் ஏற்பட்டுள்ள சந்தேகம்.

தமிழர் பிரச்னை தமிழர்களால் ஏற்படுத்தப்பட்ட பிரச்னை அல்ல. ஆட்சி பீடத்தில் அமர்வதற்கான போராட்டத்திலீடுபட்ட பிரதான கட்சிகள் தமிழ் மக்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தின இதை அந்தக்கட்சிகள் தாங்களாகவே தீர்த்துக்கொள்ள வேண்டும்.

ஆனுல் அரசியல்வாதிகள் இல்லாத பிரச்னைகளை உருவாக்கியும் இருக்கும் பிரச்னைகளைப் பெரிதுபடுத்தியும்தான் வாழவேண்டும். இல்லையேல் அவர்களுக்கு வாழ்வில்லையே!

தமிழ்மக்களின் பிரச்னைகளுக்குச் சுமுகமான தீர்வு காண்பதற்காக இருபதுஅம்சத் திட்டத்தைச் சமர்ப்பித்துப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தியவர்களில் ஒருவரான ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தமிழருக்கு சமத்துவம்வழங்கப்படவில்லையானுல் பிரிவினை தவிர வேறு வழியில்லையென்று தெளிவாகத் தெரிவித்திருப்பது சிந்தனைக்குரியது.

## 'பொருளாதார விருத்திக்கு நீரைப்பாதுகாத்தல் அவசியம்"

யாழ்ப்பாணம், புதன்

"இஸ்ரேல் நீர்வளமற்ற நாடாக இருந்தாலும், அந்நாட்டு மக்களின் அயராத உழைப்பினுலும். மூளைத் திறத்தினுலும் இன்று உலகம் வியக்கும் முறையில் முன்னேறியுள்ளார்கள். இங்கு ஒரு துளி மழைபெய்தாலும் வீணுகவிரயமாக்கபடுவதில்லை அதே போன்று நாமும் இஸ்ரேலைப் போல் மழைநீர் வீணுகாமல் பாதுகாத்தால் பொருளாதார வளம்காண முடியும்"

இவ்வாறு விக்ரோறியாக் கல்லூரி தேசிய உயர் கல்விச் சான்றிதழ் வகுப்பு மாணவர்களால் எழக்கம்பரையில் அமைக்கப்பட்டுள்ள செயல் திட்ட முகாமில் நடைபெற்ற கருத்தரங்கில் வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. சோ. அருணுசலம் கூறிஞர்.

இக்கருத்தரங்குக்கு கல்லூரி அதிபர் திரு. ஏ. எம். ஸ்பென்சர் தலைமைதாங்கிஞர்.

கல்லூரி செயல் திட்ட ஆசிரியர் திரு. எஸ். பத்மநாதன், பேசுகையில், "எமது பொருளாதார அபிவிருத்தி நாம் தேக்கிவைக்கும் நீரிலேயே தங்கியுள்ளது. நாட்டின் நலனை முன் விட்டு எமது மாணவர்கள் "நீர்ப்பாதுகாப்பை" தமது செயல்திட்டமாக கொண்டுள்ளனர். இத்திட்

(5-ம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின்புதியராஷ்டிரபதி திருமதிருக்மணிஅருண்டேல்?

இந்தியாவின் புதிய ஜனுதிபதியாக போட்டியின்றி ஏகமனதாக ஒருவர் தெரிவு செய்யப்படவேண்டுமென்று, பிரதமர் தேசாயும், எதிர்க்கட்சித் தலைவர் சவானும் ஒப்புக்கொண்டிருக்கிருர்களாம். இது பலவிதங்களிலும் வரவேற்கத்தக்கதாகும்,

இந்திய தேசிய காங்கிரஸ் இரண்டாகப் பிளவுபட்டதே, ஜனுதிபதித் தேர்தலை முன்விட்டுத்தான். சஞ்சீவரெட்டியை காங்கிரஸின் 'ஸிண்டிகேட்' கட்சிகோஷ்டி பிரேரித்தது. இந்திராகாந்தி அதைஒப்பாமல், வி. வி. கிரியை பிரேரித்தது மட்டுமன்றி புதியகாங்கிரஸை ஆரம்பித்து, கிரியை வெற்றியீட்டச் செய்தார். இன்று பழைய காங்கிரஸ் ஸ்தாபனமும், பழைய காங்கிரஸ் கொடியுமே இல்லாது போய்விட்டது.

நாட்டிலே எல்லா மக்களுடைய விசுவாசத்தையும் நம்பிக்கையையும் பெறவேண்டிய ஜனுதிபதி தேர்தல்விஷயத்தில் போட்டிகள் ஏற்பட்டு, மக்களின் ஒரு பகுதியினரின் விசுவாசத்தை இழப்பதாயின், நாட்டின் ஒற்றுமைச் சின்னமாக ஜனுதிபதி எப்படி விளங்கமுடியும்? இதை எல்லாம் கருதியேசிலர் பிரதமரும், எதிர்க்கட்சித்தலைவரும் கலந்துயோசித்து, தலைவர் தேர்தலில் போட்டியைத் தவிர்ப்பது என்று முடிவுசெய்திருக்கவேண்டும்

யாரைத் தலைவராக்குவது என்பது அடுத்த கேள்வி. விஜயலெட்சுமி பண்டிட்டின் பெயரும், சஞ்சீவரெட்டியின் பெயரும் அடிபட்டன. அரசியலசம்பந்தப்பட்டவராதலால் விஜயலெட்சுமியின் பெயர் எடுபடவில்லை. ரெட்டியார் போட்டியை விரும்பாமல் விலகிவிட்டார்.

**கே. பி. எச்**

ஜனுதிபதி பதவிக்கு அரசியல் சம்பந்தப்படாதவரும், தகராறுகள் அற்றவரும்,தென்னுட்டைச் சேர்ந்தவரும் சீலமும் பண்பும் வாய்ந்தவருமான திருமதி ருக்மணி அருண்டேல் அவர்களின் பெயரைக் குறித்து பிரதமர் தேசாய், எதிர்க்கட்சித் தலைவரை அழைத்துப்பேசி அவரும்ஒப்புக்கொண்டு விட்டார்.பொதுவாகப் பலரும் திருமதி ருக்மணி அருண்டேலின் பெயரை ஒப்புக்கொண்டு விட்டாலும் வேறு காரணத்தால் தயங்குவதாகத் தெரிகிறது.

எப்படியும் இவ் விஷயத்தில் பிரதமர் தேசாயின் விருப்பத்துக்கு ஜனதா கட்சியில் எதிர்ப்பு இருப்பின் பிரதமரின் நிலைமைக்குக் குந்தகம் ஏற்படலாம். அநேகமாக திருமதி ருக்மணி அண்டேலேஜனுதிபதியாக ஏகமனதாக தெரிவுசெய்யப்படக் கூடுமென்று தெரிகிறது.

ஒரு சிறிய சந்தேகம்' திருமதி அருண்டேல், ஜனுதிபதியாயின், அவரது பதவியின் பெயரை மாற்றவேண்டுமா என்று சிலர் சந்தேகம் எழுப்பியுள்ளனராம். ராஷ்டிரபதி என்பதில், பதி என்பது ஆணைக் குறிக்கும். பெண்பாலுக்கு 'சதி' என்று பெயர். ஒரு பெண்மணி நாட்டின் தலைவராகிவிட்டால், அப்பதவியின் இந்திப் பெயரை எப்படி மாற்றுவது? "பிரஸிடெண்ட்" என்று ஆங்கிலப் பெயரை அப்படியே விட்டுவிடுவதா! ஜனதா கட்சியில் உள்ள இந்தித் தீவிரவாதிகள் இதற்கு சம்மதிப்பது சந்தேகம் என்று புதுடில்லியிலுள்ள "இந்து" பத்திரிகை நிருபர் ஜி. கே. ரெட்டி எழுதுகிருர்.

### தமிழ்ஈழ அரசியல்யாப்பு

# சிறுபான்மைத் தமிழர் பிரச்னையைத் தீர்க்கும்

—ராஜலிங்கம் கருத்து

யாழபபாணம், புதன்

"தமிழ் ஈழத்தின் அரசியல் யாப்பு சிறுபான்மை இனத்தவருக்கு உரிய பிரதிநிதித்துவத்தை வழங்கி அவர்களுடைய சமூக-பொருளாதாரப் பிரச்னைகளைத்தீர்க்கும். எனவே சிறுபான்மை இனத்தவர் விடுதலைப் போராட்டத்தில் ஒதுங்கியிராது, தங்கள் பங்கையும் சரிவர ஆற்றி அதன்பின்பு நீதியுடன் தங்கள் உரிமைகளை புதிய தமிழ் ஈழ அரசியலமைப்பின்மூலம் பெற்றுக்கொள்ள நியாயமான முறையில் இயங்க வேண்டும்"

இவ்வாறு தமிழர் விடுதலைக்கூட்டணி உடுப்பிட்டித் தொகுதி அபேட்சகர் திரு. இராசலிங்கம் யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்திக்கருகில் நிகழ்ந்த, யாழ்ப்பாணத் தொகுதி அபேட்சகர் திரு. யோகேஸ்வரனின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், "இலங்கையில் சிங்கள அரசுகள் சிறுபான்மைத் தமிழர்களுக்கு சலுகைகள் வழங்கி வெளிஉலகுக்கு அவர்கள் மேல் தாம் அக்கறை கொண்டவர்கள்போல் பாசாங்குசெய்தார்களேயன்றிஉரிமைகள் வழங்கவில்லை. இந்தியாவில் அரசியலமைப்பின் மூலம் ஹரிஜனங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது, அதன் பிறகே இந்தியாவில் இப்பிரச்னைக்கு ஓரளவு தீர்வு அங்கு ஏற்பட்டது. இங்கும் சிறுபான்மைத்தமிழருக்கு அரசியலமைப்பின் மூலம் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்குமானுல் இங்கும் இவ்இனத்தின் பிரச்னைக்கு ஓரளவு தீர்வுஏற்பட்டிருக்கும். ஆனுல் சிங்கள அரசுகள் அரசிலமைப்பின் மூலம் சிறுபான்மை இனத்திற்கு பாதுகாப்புவழங்காது வெறும் சலுகைகளையே வழங்கியுள்ளன. தொகுதி ஒதுக்கீட்டில் கூட சிங்கள அரசின் தொகுதி நிர்ணய சபையினர் ஐந்தரை இலட்சம் சிறுபான்மை மக்களுக்கு ஒரு தொகுதி கூட ஒதுக்காது ஐந்தரை லட்சம் மக்களை அரசியல் அனுதைகளாக்கிவிட்டனர். ஆனுல் தமிழர் விடுதலைக்கூட்டணி என்னை உடுப்பிட்டியில் அபேட்சகராக நியமித்துள்ளதின் மூலம் இக்குறையை போக்கியது நான் தனிப்பட்ட இராசலிங்கமா உடுப்பிட்டியில் போட்டியிடவில்லை. ஐந்



தரை லட்சம் மக்களின் பிரதிநிதியாக உடுப்பிட்டித் தொகுயில் போட்டியிடுகிறேன். மேலும் தமிழ்மக்கள் பல ஆண்டு காலமாக சிங்கள அரசுகளால் சொல்லொணு இன்னல்கள் அனுபவித்தபின் 72-ம் ஆண்டு ஒன்றுபட்டனர். பிரதேச-மத உணர்வுகளை மறந்தனர். ஏன் அரசியல் பேதங்களை கூட மறந்து இருபெரும் தமிழ் அரசியல்கட்சிகளும் ஒன்ருகின இதன்பின்பே உள்ளூர் பிரச்னையாக இருந்த தமிழர் பிரச்னை தேசிய பிரச்னையாக இன்று வெளி உலகின் கண்களைக் கவரத் தொடங்கியுள்ளது. இதுவே ஒற்றுமையின் முதல் பலன்.

### கொல்வினின் யாப்பு போல் இருக்காது

சிங்கள அரசு முதலில் பிரஜாவுரிமைச் சட்டத்தின் மூலம் தமிழ்மக்களில் ஒரு பகுதியினரை நாடற்றவராக்கி அவர்கள் நிலத்தைப் பறித்தது பின்பு அவர்களின் மொழிஉரிமையைப் பறித்தது. இறுதியில் அரசியலமைப்பின்மூலம் அவர்களின் அடிப்படை உரிமைகளையும் பறித்துள்ளது. இந்தியாவில் சிறுபான்மை மக்களின் பிரச்னையை சிங்கள அரசுகள் ஒருபொழுதும் தீர்க்காது. சிறுபான்மை இனத்தின் இடை தனித்தமிழ்நாடு ஒன்று உருவானுல் தங்கள் வாழ்க்கை எப்படி அமையும் என்னும் ஏக்கத்தை சிலஎதிர்ப்புச் சக்திகள் தூண்டிவிடுகின்றன. ஆனுல் உருவாகப் போகும் புதிய தமிழ் ஈழத்தின் அரசியல் அமைப்பு - கொல்வினின் இன்றைய யாப்புப் போன்று அமையாது. சிறுபான்மை இனத்திற்கு ஏற்ற பிரதிநிதித்துவம் வழங்கப்படக்கூடிய முறையில் தொகுதி நிர்ணயிக்கப்படும். அதன்மூலம் எமது மக்கள் அமைச்சர்களாகவும் முதலமைச்சர்களாகவும் வரக்கூடிய சூழ்நிலை உருவாகலாம்.

### இளைஞர்களின் உணர்வு

சாதி உணர்வு தனித்தமிழ் நாட்டிற்கு ஒரு தடைக்கல்லாக இருக்கின்றது என்பதை உணர்ந்தே தமிழ்த்தலைவர்கள்என்னை உடுப்பிட்டியில் சிறுபான்மை இனத்தின் பிரதிநிதியாக நிறுத்தியுள்ளனர். அதுமட்டுமல்ல, முதன்முதல் சமூகப்பாதுகாப்புச் சட்டத்

(6-ம் பக்கம் பார்க்க)

# இடி அமின் கொலை முயற்சி: பிரிட்டனும் உடந்தையாம்!

## ஆபிரிக்க ஒருமைப்பாட்டு மாநாட்டில் தகவல்

லண்டன், ஜூலை 5

'என்னைக் கொலை செய்ய நடந்த முயற்சிக்கு பிரிட்டனும் உடந்தையாக இருந்தது' என்று உகண்டா ஜனாதிபதி இடிஅமின் கூறினார். கபோனில் நடைபெற்று இன்றுடன் முடிவடைந்த ஆபிரிக்க ஒருமைப்பாட்டு மாநாட்டில் பேசுகையிலேயே இடிஅமின் மேற்கண்டவாறு கூறினார்.

'என்னைக் கொலைசெய்ய முயன்றவர்கள் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்' என்று மேலும் தெரிவித்த அவர், 'கொங்கோ ஜனாதிபதியையும் கொல்வதற்கு சதி முயற்சி நடந்தது' என்றும் கூறினார்.

உகண்டாவில் பிரிட்டனின் ஏகாதிபத்தியத்தை முறியடிக்க உகண்டா பாதுகாப்புச் சபை எனக்கு பூரண அதிகாரம் வழங்கியுள்ளது' என்றும் அவர் சொன்னார். (உ)

## நூறுகோடிக்குமேல் சொத்துமதிப்புள்ள 16 குடும்பங்கள்

புதுடில்லி, ஜூலை 5

தலைக்கு 100 கோடிக்குமேல 300 கோடிக்கும் அதிகமாய் சொத்து மதிப்புள்ள 16 ஏக போகக் குடும்பங்கள் இந்தியாவில் உள்ளன.

அவைகளின் பெயர்கள்: டாட்ட, பிர்லா, மபத்லால், ஜே. கே. சிங்காணியா, தாபர், இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ், சிந்தியா, பாங்குர், அசோஷியேட்டட் சிமெண்ட் கம்பனி, ஸ்ரீராம், லால் சந்த், லார் சன் அன்டுப் ரோ, கிர் லோங்கர், கட்டாவ், சாராபாய், கஸ் தூர் பாய் லால் பாய்.

இது, ஜூன் 15-ல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. ஏ ராஜன் கேள்வி ஒன்றுக்கு 1969-ம ஆண்டின் ஏகபோகக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 26-வது பிரிவின் படி 1976 டிசம்பா 31-ல் இந்திய அரசுக்குக் கிடைத்த தகவலின் படிக்கு ஜனதா அரசாங்கத்தால் அளிக்கப்பட்டபதிலகும்.

மேற்படி ஏகபோக சொத்துக்கள் எக்காரணம் பற்றியும் தேசிய மயமாக்கப்பட மாட்டாது என்றும் ஜனதா அரசு உறுதி அளித்துள்ளது. (கூ)

## சஞ்சயின் கடன் பத்திரம் வங்கியிலிருந்து மாயம்!

புதுடில்லி, ஜூலை 5

சஞ்சாய் காந்திக்கு கடன் வழங்கிய தேசியமயமாக்கப்பட்ட 'சென்டிரல் பாங்க் ஒப் இந்தியா' வங்கியில் காந்திக்கு கடன் வழங்கிய பத்திரங்கள் காணாமல் போய்விட்டன, என்றும் 71 ம் ஆண்டு முதல் 74-ம் ஆண்டு வரையிலான காலத்தில் பெருந் தொகையான பணம் வழங்கப்பட்டிருப்பதாகவும் நிதிய மைச்சர் திரு. எம். எச். பட்டேல் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் தேசியமயமாக்கப்பட்ட பெருவங்கிகளில் இதுவும் ஒன்று. கடன்பத்திரங்கள் காணாமல் போனாலும் பணத்தை வழங்கிய பதிவேடுகளின் பிரதிகள் மாவட்ட தலைமை வங்கியலுவலகத்தில் பெறுமுடியும் என்றும் இதன மூலம் இதுபற்றிய விபரங்களை மேலும் பெறமுடியுமெனவும் அமைச்சர் தெரிவித்தார். (கெ-இ)

## உயர்ஜாதி வீட்டில் திருட்டு: ஒருவர் கொலை

ஹைதராபாத், ஜூலை 5

உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த ஒருவரின் வீட்டில் திருடினார் என்று கூறப்பட்ட 'ஏநாதி' இன மலைச் சாதியைச் சேர்ந்த ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டு, அவரது உடல் தீயிடப்பட்டதுடன், அவரது மனைவியும் கற்பழிக்கப்பட்டாராம்.

ஆந்திர பிரதேசத்தில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சென்னூர் கிராமத்தில், நடைபெற்ற இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

உயர் சாதியைச் சேர்ந்த ஒருவர் வீட்டில் களவு நடைபெற்றதை யொட்டி, மலைச் சாதியைச்சேர்ந்த இரமையா என்பவர், இத் திருட்டைச் செய்திருக்கலாமென எண்ணி இவரது வீட்டுக்குச் சென்று, இவரை அடித்துக் கொலை செய்துவிட்டு, டீசல் ஊற்றி, இவரது உடலைக் தீயிட்டுக் கொழுத்தினராம்.

இதை அடுத்து, இவரது மனைவி கற்பழிக்கப் பட்டதுடன் அவரது உறவினப் பெண்களும் தாக்கப்பட்டனராம். பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர். (கெ-இ)

## 'அரசாங்கத்தை ஆதரித்தேன் என்பது பொய்ப்பிரசாரம்'

—சி. பொ. மயில்வாகனன்

யாழ்ப்பாணம், புதன்

"பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக இருந்த காலத்தில் நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்ததாகப் பொய்ப்பிரசாரம் செய்யப்படுகிறது. சங்கத்தின் இயக்குநர் சபைக்கு அங்கத்தவர்களாய் தெரிவு செய்யப்பட்டவர்களில் ஒருவனான நான் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டேன்" என்று சாவகச்சேரித் தொகுதிச் சுயேட்சிக் கழக வேட்பாளர் திரு. சி. பொ. மயில்வாகனன் தம்மை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். திரு. கா. குலசேகரம் தலைமையில் வாடிவீட்டு முன்றலில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. மயில்வாகனன் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"தேசியப் பேரவை செல்லும் ஆசையில் நான் தேர்தலில் போட்டியிடுவதாகச் சொல்கின்றனர். அப்படி ஆசை எனக்கில்லை. ஆனல் எனது தொகுதியில் போட்டியிடும் இருவர் மந்திரிப் பதவி ஆசையில் போட்டியிடுகின்றனர். நான் ஆட்சிமன்றம் சென்ருல் எமது கழகத்திற்கு உறுதுணையாக நின்று உழைப்பேன்."

இக்கூட்டத்தில் சட்டத்தரணி செ. கோடீஸ்வரன், சட்டத்தரணி ந. ஸ்ரீகாந்தா ஆகியோரும் பேசினர். (அ

## ஐ.தே. கட்சிக்கோ, சுதந்திரகட்சிக்கோ இந்திய வம்சாவழியினரிடம் வாக்கு கேட்க உரிமையில்லை

ஹட்டன், செவ்வாய்

'பாராளுமன்றத்தில் இந்திய வம்சாவழி மக்களின் சார்பில் ஒரு பிரதிநிதி இருப்பதின் மூலம், இந்திய வம்சாவழி மக்களினது, குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களினது பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியுமென்னும் தவருன பிரச்சாரம் நுவரெலியா-மஸ்கெலியா தொகுதியில் இன்று மேற்கொள்ளப்படுகின்றது. ஆனல் 1952ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரையும் தொண்டமானே, அஸிசோ இந்திய வம்சாவழி மக்களின் சார்பில் பாராளுமன்றத்தில் நியமனப் பிரதிநிதிகளாக இருந்துவந்திருக்கின்ருர்கள் என்பதையும், 1947ம் ஆண்டு தொடக்கம் 1952ம் ஆண்டுவரையும் இலங்கை இந்திய காங்கிரஸ் என்னும் ஸ்தாபனத்தின் சார்பில் ஏழு அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகித்தனர். என்பதையும் இந்த ஏழு பேரும் அங்கத்துவம் வகித்த பாராளுமன்றம்தான் இந்திய வம்சாவழி மக்களின் வாக்குரிமையையும், பிரஜாவுரிமையையும் பறித்தெடுத்தது என்னும் உண்மையை இவர்கள் மறந்துவிடுகின்றனர்.

இவ்வாறு இலங்கைக் கம்யூனிஸ்ட்சட்சியின் பொதுச்செயலாளரும், புதிய செங்கொடி தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவருமான திரு. என். சண்முகதாசன் மஸ்கெலியா, டீசைட் தோட்டத்தில் நடைபெற்ற பொதுச் கூட்டத்தில் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர். இக்கூட்டத்துக்கு, புதிய செங்கொடி தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் உபசெயலாளர் திரு. கே. சுப்பையா தலைமைதாங்கினர்.

திரு சண்முகதாசன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

யு என். பிக்கோ சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கோ இந்திய வம்சாவழி மக்களின் வாக்குகளை கேட்பதற்கு எவ்வித உரிமையும் கிடையாது. இக் கட்சிகளின் காலஞ்சென்ற தலைவர்களான டி. எஸ். சேனநாயக்காவும், எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும் அங்கம் வகித்த மந்திரி சபைதான் இந்திய வம்சாவழி மக்களின் பிரஜாவுரிமையையும், வாக்குரிமையையும் பறித்தெடுத்து இவ்விரு கட்சிகளுக்கும் தோட்டத் தொழிலாளர்கள் வாக்களிப்பது என்பது உதைத்த காலை நக்குவது போலாகும். பாராளுமன்றத்தின் மூலமாக தோட்டத் தொழிலாளர்களின் பிரச்னைகளை ஒருபோதும் தீர்த்துவைக்க முடியாது. ஆகவே இப்பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டுமெனில் புரட்சிகர மாற்றம் ஒன்றினுல் இச்சமுதாய அமைப்பையே மாற்றியமைக்கவேண்டும். (இ)

## நெருக்கடி நிலையின் போது தணிக்கை அதிகாரிகள் 2 லட்சம் செலவிட்டனராம்

புதுடில்லி, ஜூலை 5

நெருக்கடி நிலையின் போது இந்தியாவில் தணிக்கை அதிகாரிகள், அரசாங்கப் பணத்தில் 2 லட்சத்து 24 ஆயிரம் ரூபாய் செலவிட்டுள்ளனர்.

இதில் ஒரு லட்சத்து 48 ஆயிரம் ரூபாய் பயணத் தேவைகளுக்கும், விருந்தோம்பலுக்கு 11 ஆயிரத்து 477 ரூபாயும், பிரசுர தேவைகளுக்கும் 57 ஆயிரத்து 309 ரூபாயும் செலவிட்டதாக ஒலிபரப்புதுறை அமைச்சர் தகவல் வெளியிட்டுள்ளார். (கெ)

## யாழ்.ஆஸ்பத்திரிமருந்துகள் ஊழியர் வீட்டில் மீட்பு!

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு உரியதெனக் கருதப்படும் மருந்துவகைகளும், மற்றும் பொருட்களும், நேற்று ஆஸ்பத்திரி தொழிலாளிஒருவரின் வீட்டில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

யாழ்ப்பாணம்குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவுக்குழுவிற்கு கிடைத்த ரகசிய தகவலைத் தொடர்ந்து இந்த திடீர் சோதனை நடைபெற்றது.

பொலிஸாரினுல் கைதுசெய்யப்பட்ட ஆஸ்பத்திரி தொழிலாளியின் மனைவியும், யாழ். பெரியாஸ்பத்திரியில் தொழிலாளியாக கடமையாற்றுகிருர் என்று விசாரணையில் தெரிய வந்துள்ளது.

பொலிஸார் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர். (க)

## தொழில்திணைக்கள தமிழ்க்கழகம்

கொழும்பு, புதன்

தொழில் திணைக்களத் தமிழ்க்கழகத்தின் 11-வது ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்ற போது பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. சோ, க. வேலாயுதர், உப தலைவர்கள்: திரு இ. தியாகராசா, திரு. மு. செல்லத்துரை, பொதுச் செயலாளர்கள்: திரு. வி. குகதாசன், திரு, ஆ சிவநேசராசா, நா. சூரி, பொருளாளர்: திரு. இரா. கந்தவனம், உபபொருளாளர்கள்: திரு.வி. மருதடியான். வே. கந்தசாமி, நூலகர் திரு. செ. அன்ரன், உப நூலகர்: திரு. கா. குலசேகரம். இதழாசிரியர்: ஜனப் வை. எல். எம். முகுசீன்.

7பேர்கொண்ட நிருவாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (ம)

## "யு. என். பி. யின் சோஷலிஸ ஆட்சியில் இளைஞருக்கே பெரும் பங்கு"

யாழ்ப்பாணம், புதன்

"ஐக்கிய தேசியக் கட்சி தோன்றிய நாள் முதல் முதலாளித்துவப் பாதையில் சென்ற ஐக்கிய தேசியக் கட்சியை இன்று இளம் தலைமுறையினர் ஒரு ஜனநாயக சோஷலிசக் கட்சியாகப் புனரமைப்புச் செய்துள்ளனர். அரசியல் முதிர்வு பெற்ற திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில் எமது ஆட்சி ஓர் இளைஞர் அரசை அமைத்தேதீரும். கட்சியின் சார்பில் போட்டியிடும் மொத்த வேட்பாளர்களில் 123 பேர் இளைஞர்கள். இவர்களின் வெற்றியில் ஆக்கப்படும் அரசு ஓர் இளைஞர் அரசாகவே தொழிற்பட உள்ளது. இளைஞர்களையே இந்நாட்டு மன்னர்களாக ஐ. தே. கட்சி கணிக்கிறது என்பதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண்டும். எனவே இளைஞர் நலம் பேணும் கட்சி ஐ. தே. கட்சி ஒன்றே."

நெடுந்திவு மத்தியில் வாலிபர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய காவலூர்த் தொகுதி வேட்பாளர் திரு. ம. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினர். இக்கூட்டத்திற்குக் கல்லூரி அதிபர் திரு. யோ. அந்தோனிப்பிள்ளை தலைமை வகித்தார். தொடர்ந்து உரையாற்றிய திரு. அமிர்தலிங்கம் தமதுரையில் குறிப்பிட்டதாவது:-

"இந்த நாட்டில் சோஷலிசம் பேசிய இடதுசாரிகள் பல பெயர்களில் உலாவினுலும் யாவரும் சமுதாயத்தின் பொது எதிரிகளே. கடந்த ஏழு வருடங்களில் அரசாங்கத்தில் பதவிவகித்த இவ் விடதுசாரிகள் தமிழர் பிரச்னைக்கோ, இளைஞர் பிரச்னைக்கோ ஒருவித பரிகாரமும் தேட முயற்சிக்கவில்லை. மாருக அவர்கள் தமிழர்களின் உரிமைகளை அரசியல் அமைப்பில் இருந்து தூரத்தள்ளிவிட உதவி புரிந்தார்கள். இதுதான் இவர்கள் பேசும் சமதர்ம சோஷலிசம்.

பெருந்திரளான இளைஞர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் திரு'தோமஸ், திரு சுப்பிரமணியம் ஆகியோரும் உரையாற்றினர். (கா-அ)

—

## இணக்க சபை நியமனப் பத்திரம்

யாழ்ப்பாணம், செவ்

அனலைதீவு இணக்க சபை உறுப்பினர்களுக்கான நியமனப்பத்திரங்களை, கடந்த வாரம் வருகைதந்திருந்த நீதியமைச்சுக் காரியாலய உதவியாளர் திரு. சச்சிதானந்தம் வழங்கினர். இணக்கசபையின் விசேஷ பொதுக்கூட்டம் திரு. ந. செல்லத்துரையின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இணக்கசபையின் நடைமுறைகள் பற்றியும் விரிவாக எடுத்துக்கூறப்பட்டது. (கெ)

## எம். பி.யாவது எப்படி?

# அங்கீகரிக்கப் படாத கட்சிகளின் சின்னங்கள்

### அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்சி எவ்வளவு காலத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட கட்சியாகத் தொடர்ந்திருக்க முடியும்?

தேர்தலின் நோக்கத்துக்காக அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்சியாகக் கணிக்கப்பட உரித்துப் பெற்ற ஒரு கட்சியின் சார்பில் உத்தியோகபூர்வ வேட்பாளர் ஒருவர்தானும் தேர்தலுக்கெனப் பெயர்குறித்து நியமிக்கப் படாவிட்டால், அந்தக் கட்சி ''அங்கீகரிக்கப்பட்ட கட்சியாகக் கணிக்கப்பட உரித்துப்பெற்ற கட்சி'' என்ற அந்தஸ்தை இழந்துவிடும்.

அத்தகைய கட்சியினல் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர், அல்லது ஒருவருக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் நியமிக்கப்பட்டிருப்பின் அவர்கள் எல்லோரும், அந்தத் தேர்தலில் தனது கட்டுப்பணத்தை, அல்லது தங்களுடைய கட்டுப்பணங்களை இழந்தாலும் அந்தக் கட்சி ''அங்கீகரிக்கப்பட்ட கட்சியாகக்கணிக்கப்பட உரித்துப்பெற்ற கட்சி'' என்ற அந்தஸ்தை இழந்துவிடும்.

## சட்டமும் சமுதாயமும்

### அங்கீகரிக்கப்படாத கட்சிகளின் சின்னங்கள்

குறைந்தது ஐந்து ஆண்டுகளுக்கு ஆகுதல் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக நிரூபிக்கமுடியாத கட்சி அங்கீகாரத்துக்கென விண்ணப்பிப்பதில் அர்த்தமில்லை. குறைந்தது ஐந்தாண்டுகளுக்கேனும் அரசியலில் ஈடுபட்டது என்ற தகுதியைப் பெறுவிடினும், கடந்த தேர்தலில் போட்டியிட்டு இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்களைப் பாராளுமன்ற உறுப்பினர்களாகப் பெற்றது என்ற தகுதிபெற்ற கட்சி, அங்கீகாரத்துக்கு விண்ணப்பிக்கலாம் என்பதை முன்னே விளக்கியுள்ளோம்.) தேர்தல் என்றவுடனும் புற்றீசல் போலவும், கறையான் புற்றுக்காளான்கள் போலவும் புதுக் கட்சிகள் பல இரவோடிரவாக உருவெடுக்கின்றன. இவற்றின் நிலை என்ன? அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளாகக் கணிக்கப்படவென இவை விண்ணப்பிக்க முடியாது என்பதை மீண்டும் சொல்லவேண்டியதில்லை. அப்படியாயின் இக் கட்சிகள் என்ன பெயரில் போட்டியிடுவது? உதாரணமாக ''தன்னாட்சிக் கட்சி'' என்ற ஒரு காளான் கட்சி, 1977 மே மாதம் 24ஆம் தேதியன்று உருவாகியது என்று வைத்துக்கொள்வோம். இது 1977 யூலை 21ல் நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடவுள்ளதென்றும் வைத்துக்கொள்வோம். அப்படியாயின், இந்தக் கட்சி ''தன்னாட்சிக்கட்சி'' என்ற பெயரில் போட்டியிட முடியுமா? முடியாது. ''சுயேச்சைக் கட்சி'' என்ற பொதுப் பெயரில்தான் இக் கட்சி போட்டியிடமுடியும். 1977-ம் ஆண்டுக்கான தேர்தலில் இலங்கை அடங்கிலும் 270 வேட்பாளர்கள் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார்கள்

என்பது குறிப்பிடத்தக்கது.

சுயேச்சையாகப் போட்டியிடும் தன்னாட்சிக் கட்சி எனப்படும் இந்தக் கட்சியின் சின்னம் என்ன? சுயேச்சையாகப் போட்டியிட அனுமதிக்கப்படும் இந்தக் கட்சி, நியமன நாளன்று ஒரு சின்னத்தைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியும். அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட சின்னம் எதையும் சுயேச்சைக் கட்சிவிரும்பமுடியாது. நியமன நாளன்று, ஆட்சேபனைக்கான நேரம் முடிவடைந்தவுடனும், தேர்தற் பொறுப்புத்தியோகத்தர், அங்கிருக்கும் சுயேச்சை வேட்பாளர்களிடம், அவர்கள் விரும்பும் சின்னத்தைத் தெரிவு செய்து, அந்நோக்கத்துக்கெனத் தரப்படும் படிலத்தில் எழுதித்தருமாறு கேட்பார்.

—செ. சிறீக்கந்தராசா—
(சட்டத்தரணி)

சம்பந்தப்பட்ட தொகுதியில் ஒரேயொரு சுயேச்சை வேட்பாளர் மட்டும் போட்டியிடுவதானல் அவர் விரும்பும் சின்னம் அவருக்குக் குறித்தொதுக்கப்படும். ஒருவருக்கு மேற்பட்டோர் இருந்து அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு சின்னங்களை விரும்பிக் கொண்டாலும் பிரச்னை எழாது. ஒருவருக்கு மேற்பட்டோர் இருந்து அவர்களுள் இருவர் அல்லது இவருக்கு மேற்பட்டோர்குறிப்பிட்ட ஒரே சின்னத்தை விரும்பிவிட்டால் சிக்கல்தான். அவர்களே தமக்குள் உடன்பட்டு ஒரு சுமுகமான முடிவுக்கு வரமுடியுமானல் நன்று. இல்லாவிட்டால், இந்தச் சிக்கல் திருவுளச் சீட்டின் மூலம் தீர்மானிக்கப்படும். சின்னத்தைக் குறித்தொதுக்குதல் தொடர்பில் எழக்கூடிய எல்லாப் பிரச்னைகளையும் தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தற் பொறுப்புத்தியோகத்தருக்கு உண்டு. அவருடைய தீர்மானத்தை ஆட்சேபித்து நீதிமன்றம் எதிலும் வழக்குத் தொடுக்க முடியாது. (35-ம் பிரிவின்(5) ஆம் உட்பிரிவு.)

### யாருடைய முன்மொழிவையும் வழிமொழிவையும் விரும்புகின்றீர்?

வேட்பாளர் ஒருவர், ஒரு நியமனப்பத்திரத்தின்மூலமோ இரண்டு நியமனப் பத்திரங்களின் மூலமோ, மூன்று நியமனப்பத்திரங்களின் மூலமோ பெயர் குறித்து நியமிக்கப்படலாமென்றும் முன்பே கூறியுள்ளோம். நியமனநாளின் பின்னர், (i) எந்த எந்தத் தேர்தற்தொகுதிகளில் போட்டித் தேர்தல் நடைபெறும். (ii) எந்த எந்தத் தொகுதிகளில் போட்டியில்லாமல் வேட்பாளர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். (iii) ஒவ்வொரு தொகுதியிலும் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள், (iv) அவர்களின் பெயர்கள் வாக்குச் சீட்டில் எவ்வாறு அமைந்திருக்கும், (v) அவர்கள் ஒவ்வொருவருக்கும்குறித்தொதுக்கப்பட்டசின்னம் என்ன? (vi) சம்பந்தப்பட்ட வேட்பாளர்கள் ஒவ்வொருவரையும் முன்மொழிந்தவரின் பெயர் என்ன? (vii) வழிமொழிந்தவரின் பெயர் என்ன ஆகிய விபரங்களைக் கொண்ட அறிவித்தல் ஒன்றைக் கசற்றிலும் செய்தித் தாள்களிலும் வெளியிடுவார்.

ஒருவேட்பாளர், இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நியமனப்பத்திரங்களால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருப்பின், முன்மொழிந்த மூவர் பெயரையும் வழிமொழிந்த மூவர் பெயரையும் மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பது இடவசதியீனங்களை ஏற்படுத்துமாதலால் எந்தவழிமொழிபவரின் பெயரும் முன்மொழிபவரின் பெயரும் அந்த அறிவித்தலில் வரவேண்டுமென வேட்பாளர் விரும்புகின்றார் என்று தேர்தற் பொறுப்புத்தியோகத்தர் வினவுவார். வேட்பாளர் எந்த நியமனப் பத்திரத்தில் உள்ள முன்மொழிபவர், வழிமொழிபவர் ஆகியோர் பெயர்கள் அறிவித்தலில் வரவேண்டும் என ஆசைப்படுகின்றாரோ அந்த நியமனப்பத்திரத்தைத் தேர்தற் பொறுப்புத்தியோகத்தரிடம் சுட்டிக் காட்டுதல் வேண்டும் என்பதோடு, அந்த முன்மொழிபவரின் பெயரையும் வழிமொழிபவரின் பெயரையும் அதற்கெனவழங்கப்படும் படிவத்தில் எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுத்தலும் வேண்டும். வேட்பாளரது ஆசைப்படி மேற்படி அறிவித்தலில் விபரங்களைக்கொடுப்பார் தேர்தற்பொறுப்புஉத்தியோகத்தர்

## ''தனித்துநின்று நான் சாதித்தவை என்ன?''

### ராஜராஜேஸ்வரன் விளக்கம்

யாழ்ப்பாணம், புதன்

''நீதிஅமைச்சர் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது வடக்கிலும் கிழக்கிலும் தமிழ்மொழியில் வழக்குகளை நடத்துவதற்கு வசதியளிக்குமாறுநான் தனியே சென்று அமைச்சருடன் பேசினேன். இன்று வடக்கு, கிழக்கு நீதிமன்றங்களில் தமிழில் வழக்குகள் நடத்தப்படுகின்றன. கூட்டணித் தலைவர்கள் பெரும்பாலானவர்களும் சட்டத்தரணிகளாக இருந்தும் கூட அமைச்சரிடம் இதுபற்றி அவர்கள் பேசவில்லை''

இவ்வாறு நல்லூர் கல்வியங்காடு சந்தைமைதானத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் நல்லூர்த்தொகுதிச் சுயேச்சை வேட்பாளர் திரு. இராஜராஜேஸ்வரன் தங்கராஜா பேசுகையில் கூறினர்.

திரு. இராஜராஜேஸ்வரன் தங்கராஜாவை ஆதரித்துநடைபெற்ற இக்கருத்தரங்கில் அவர் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

'ஆட்சிமன்றத்திற்குத் தனியேபோய் என்ன செய்யப் போகிருய் என்று என்னைக் கேட்கிருர்கள். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் நிகழ்ந்த பயங்கர சம்பவத்தின்போது எல்லாரும் ஓடிவிட நான் தனியே நின்றுநிலைமையைச் சமாளிக்கவில்லையா? சிங்கம் ஒருபோதும் கூட்டமாகச் செல்வதில்லை. தனியேதான்செல்லும். கூட்டமாகச் செல்வது நரிகள்தான். நான் சிங்கமாகவே இருக்க விரும்புகிறேன்.

'தம்பி சிவகுமாரன் உயிருடன் இருக்கும்போது காலஞ்சென்ற அமைச்சர் திரு. சோம வீரசந்திரசிறிக்குக் குண்டுவீசியதாக அவர் மீது குற்றம் சுமத்தித் தொடுக்கப்பட்ட வழக்கில் நிரபராதியான அவரை விடுதலைசெய்ய ஆஜரானவன் நானே. இன்று அவரை வைத்து அரசியல் லாபம் தேடுபவர்கள் அவர் உயிருடன் இருந்தபோது எவருமே அவரைப் பற்றிச் சிந்திக்கவில்லை'

(அ)

...

## இன்னிசை விரிவுரை

யாழ்ப்பாணம், புதன்

சுன்னகம் ஸ்ரீமூத்துமாரி அம்மன் கோயில் திருவிழாவை முன்னிட்டு இன்று இரவு 7 மணிக்கு ஊரெழு பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா ''மீனாட்சி கல்யாணம்'' என்னும் பொருள் பற்றி இன்னிசை விரிவுரை நிகழ்த்துவார். (இ)

# கூட்டணி வேட்பாளரை ஆதரிக்க ஆசிரியர் தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ்

இம்முறை தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரிப்பதென 28ந் திகதி வைகாசி மாதம் திருமலையில் கூடிய இலங்கை - தமிழ் ஆசிரியர் ஆட்சிமன்றம்சங்கஆய்வுக் குழுவின் தீர்மானத்திற்குஅமைவாக இலங்கை தமிழ்ஆசிரியர் சங்க நல்லூர் கிளையினர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நல்லூர்தொகுதி அபேட்சகர் திரு. மு. சிவசிதம்பரத்தைஆதரிப்பதென்ற தீர்மானத்தை திரு. அ. செல்லத்துரை தலைமையில் நேற்று நல்லூர்கோவிலுக்கு அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றிக் கொண்டனர். தீர்மானம்நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து பலர் உரையாற்றினர். தலைவர் தமது உரையில் குறிப்பிட்டதாவது: தமிழினம்ஒன்றுபட்டதொரு தன்னாட்சிஉள்ள தனியினமாக தலைநிமிர்ந்துவாழவேண்டுமானல் தனித்தமிழ் நாடு அவசியம் என்பதை உணர்ந்த தமிழினத்தின் தனிப்பெருந்தலைவர் மூதறிஞர் செல்வநாயகமும், சட்ட மாமேதை திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும், மலையகத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமானும் ஒன்றிணைந்து தமிழர்விடுதலைக் கூட்டணியை உருவாக்கினர்கள். இன்றையசந்தர்ப்பத்தில் இதன் முக்கியத்துவத்தையும், இனத்தின் ஐக்கியத்தையும் உணர்ந்த வடப்பிரதேச கம்யூனிஸ்ட்கட்சி அமைப்பாளரான திரு. வி. பொன்னம்பலம்கூட இன்று இந்த இயக்கத்தில் சேர்ந்திருப்பது மிக வரவேற்கத்தக்கதொரு விஷயமாகும். இவ்வாறு அணிவரும் ஓரணி திரண்டு எமது இலட்சியத்திற்காகப் பாடுபடவேண்டும். தேர்தலில் போட்டியிடுகின்ற சகல கூட்டணி அபேட்சகர்களும் பெரும்பான்மைப் பலத்தோடு வெற்றியீட்ட நாம் பாடுபடவேண்டும்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய இலங்கைத்தமிழாசிரியர் சங்க நிதிச் செயலாளர் திரு. நா. நடராஜா தமதுரையில் இந்தநாட்டில்தமிழ்மாணவர்கள் மிகுந்த துயரமடைந்துள்ளார்கள். தரப்படுத்தல் என்ற போர்வையில் தமிழ் மாணவர்களின் உயர்கல்வி தடுக்கப்படுகிறது. தாம்பெரும்பான்மை இனம் என்பதற்காக அவர்கள் எங்கள் மீது எத்தனையோ சட்டங்களைத்திணிக்கிருர்கள்'' என்ருர்.

இலங்கைத் தமிழாசிரியர் சங்க யாழ். மாவட்டச் செயலாளர் திரு. சி. சிவபாலசிங்கம் தமதுரையில் குறிப்பிட்டதாவது:

### ஆசிரியர் பங்கு முக்கியம்

திருமலை மாநாட்டில் கூட்டணியினருக்கு ஆதரவுவழங்குவதென்று நாம் தீர்மானம் எடுத்துக்கொண்டது ஒரு மகத்தான செயலாகும். இன விடுதலைப் போராட்டத்தில் ஆசிரியர்களது பங்கு மிக முக்கியமானது. சுதந்திரம்பெற்றசகல நாடுகளிலும் ஆசிரியர்கள் ஆற்றிய பணிகள் மிக அத்தியாவசியமானது. எமதுசங்கம்தமிழ் ஆசிரியர்உரிமைகளையும், நலன்களையும்பாதுகாக்கவேண்டியது அவசியம். எம்மினத்திற்காகப் போராடுகின்ற கூட்டணிக்கு ஆதரவு வழங்குவதென்றுஎடுக்கப்பட்ட தீர்மானம் வரவேற்கத்தக்கதொன்ருகும்.

இ. த. ஆசிரியர் சங்க நிர்வாகச் செயலாளர் திரு. அ. பொன்னம்பலம் தமது உரையில்,

பாராளுமன்றம் கலைக்கப்படுகின்றவரை எமக்கு ஏதாவது விமோசனம் கிடைக்கும் எனக் காத்திருந்தோம். ஆனல் இதுவரை எமக்கு எந்த உரிமையும் வழங்காத இந்த அரசாங்கம் தாம் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தமிழரின் பிரச்னைகளை தீர்ப்பதாக கூறும் இவர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இதுபற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாதென்கிருர்கள். ஆனல் நம் இளைஞர்களுக்கு வழிகாட்டிகளாக இருந்து அவர்கள் இலட்சியம் ஈடேற உழைப்போம்.

இலங்கைத் தமிழ்ஆசிரியர் சங்கம் யாழ் மாவட்ட பொருளாளர் அ. பொ. குலசிங்கம் தமது உரையில் எமது இனவிடுதலைப் போராட்டத்தில் இளைஞர்களே மிக முக்கிய பங்கினை வகிக்கிருர்கள். அவர்களது தீவிர சிந்தனைகளுக்கும் திட்சங்கப்பத்திற்கும்தாய்மார்கள் அவர்களை வீரம்மிக்கவர்களாக வளர்த்தமை மிக முக்கியமாகும் என்ருர். யாழ்ப்பாண வேட்பாளர் திரு. வெ. யோகேஸ்வரன் தமதுரையில் இந்தத் தேர்தல் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் எமது பிரச்னைகளையும் ஒற்றுமையையும் உலகுக்கு எடுத்துக்காட்டுகின்ற தேர்தல் என்ருர்.

''நான் ஒரு சாதாரண தொண்டன் இந்த நாட்டில் தமிழ் இனம் முதன்மை என்று வாழ்ந்த இனம் அதை வாழவைக்க அதன் உணர்வுக்காக என்றும் என்னல் முடிந்தவரை பாடுபாடுவேன்'' என்று அவர் கூறினர்.

நல்லூர் தொகுதி வேட்பாளர் திரு. மு. சிவசிதம்பரம் பேசுகையில் இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கத்தினரது தீர்மானத்திற்கு நன்றி கூறினர் 'உங்களுக்கென்று ஒரு கட்டிடம் இல்லாததால் நீங்கள் பட்ட கஷ்டத்தை நான் உணர்கிறேன். நான் பாராளுமன்றப் பிரதியாகத் தெரிவு செய்யப்பட்டவுடன் பெரியதொரு கட்டிடம் அமைத்துத்தர நடவடிக்கை எடுப்பேன்'' என்ருர். (கா)

## நாளை கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

காங்கேசன்துறை இறங்கண்யவளை சிவகுருநாதசுவாமி கோவில் மகாகும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை நடைபெறவிருக்கிறது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 12தினங்கள் அலங்கார உற்சவமும் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் நிகழும். (அ)

வின்ஸர் சிவராம், கீதாஞ்சலி,
(யாழ்ப்பாணம்) தர்மலிங்கம், ஶ்ரீதேவி
தினசரி 4 காட்சிகள் நடித்த
ஜெயேந்திரா மூவீஸ்
காத்திருப்பேன் உனக்காக

RIO (Jaffna) Daily 10-30 ,4-45,7-15, 9-45 p.m.
ROBINSON CRUSOE
(Family Entertainment) (Scope-color)
1-30 p. m. Special show for Schools

ராஜா 60-துவ தினம்
(யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
போன்: 7180
தேவரின்
திருவருள்
(ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

ராணி 63-வது நாள்
(யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

ஶ்ரீதர் சிவாஜி - பத்மபிரியா
(யாழ்ப்பாணம்) முத்துராமன் - சகுந்தலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
ஶ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் ஜெமினி — வைஜந்திமாலா
[யாழ். நகர்] நடித்த
தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்
தேன் நிலவு

லிடோ போன்: 7693 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ்.நகர்)
சிவாஜி — கே. ஆர். விஜயா நடித்த
பாலாடை
8-ந் திகதி முதல் சிவாஜி நடித்த
பணம்

REGAL Daily: 10-30 a.m. 2-30 4-45, 7-00 & 9-30 p. m.
(JAFFNA)
FRANKIE HOWERD, DORA BRYAN
in
"The Great St. Trinian's Train Robbery"
Color, (Family Entertainment)

சாந்தி யாழ். நகர் தினசரி
போன்: 7642 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி கணேசன் சாவித்திரி
நவரசங்கள் திகழும் 9 வேடங்களில்
நவராத்திரி
கதை, வசனம், டைரக்ஷன்: ஏ. பி. நாகராஜன்

மனோகரா ஜெமினி—விஜயா
[யாழ்ப்பாணம்] நாகேஷ், தங்கவேலு
நடித்த
தேன்மழை

வெகு விரைவில் வருகிறது
எம். ஜி. ஆர் -லதா நடித்த
உழைக்கும் கரங்கள்


# "தனித்து நின்றேனும் தனிநாடு பெறுவேன்"

—வி. குமாரசாமி

கொடிகாமம், செவ்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் 15 பேரையும் பாராளுமன்றத்தின் ஒரு மூலையில் இருத்திவிட்டு, நான் மட்டும் தமிழ்மக்களுக்கு 'தனிநாடு' பெற்றுத்தருவேன். இற்றைக்கு 21 வருடங்களாக உங்களை ஏமாற்றும் கூட்டணியினர் ஏன் இந்த 21 வருடங்களாகத் தமிழ்நாடு பெறமுடியவில்லை.

மீசாலை புத்தூர் சந்திக்கு அருகாமையில் திரு. பொ. சிற்றம்பலம் தலைமையில் நடந்த கூட்டத்தில் ஜீ. ஜீ. காங்கிரஸ் வேட்பாளர் திரு. வே. குமாரசுவாமி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

உலகின் பல பாகங்களுக்கும் சென்ற எனக்கு சிங்களப் பாராளுமன்றத்தையும்பார்க்க வேண்டும் என்ற ஆசை எனக்கில்லை. ஆனால் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம், தந்தை செல்வநாயகம், அமரர் வன்னியசிங்கம் போன்ற தலைவர்களோடு நானும் முதன் முதல் பாராளுமன்றம் சென்று செய்த சேவையை உங்களுக்கு மீண்டும் செய்ய ஆசைப்படுகிறேன்.

தமிழ் மக்களின் பொருளாதார, கலை, கலாச்சாரங்களை உலகம் அறியவும் உலகநாடுகளில் தமிழ் மக்கள் தலைநிமிர்ந்து வாழ வழிசெய்யவேண்டும் என்பதுவுமே எனது நோக்கமாகும். இப்போதைய கட்சிகள் மக்களை எத்தனையோ சிக்கல்களுக்கும். சித்திரவதைகட்கும். கஷ்டங்களுக்கும் உள்ளாக்கின மக்களை துன்பப்பள்ளத்தில் வீழ்த்தியிருக்கிறார்கள் இவர்கள் மக்களைக் கஷ்டப்படுத்தும் பாதையைத் தடை செய்வதற்காகவும், மக்களை ஒரு புதிய உத்வேகப்பாதைக்கும் அழைத்துச் செல்வதற்காகவே நான் தேர்தலில் போட்டியிடுகிறேன். நான்வெற்றிபெற்றால்தனித்துநின்றேனும் தமிழ்நாடு பெற்றுத்தருவேன்.

திருவாளர்கள் அ. ஆறுமுகம் ஏ. தில்லைநாதன், வி. பராராசசிங்கம், இ. சின்னத்தம்பி ஆகியோரும் பேசினர். (அ)

# 'விஜயவீராவுக்கு மட்டும் தேர்தலில் நிற்கஏன்உரிமை இல்லை?'

ஜே ஆர். கேட்கிறா

கொழும்பு, செவ்.

"ஐக்கியதேசியக்கட்சி ஆட்சிக்கு வந்தால் நாங்கள் ரோகன விஜயவீரா பற்றிப் புனராலோசனை செய்வோம். அவர் சாகும்வரை சிறையில் இருக்க வேண்டுமா இல்லையா என்பது பற்றி முடிவுசெய்வோம்"

இவ்வாறு கங்குரன் கட்டையில் நடந்த தேர்தல்பிரசாரக் கூட்டத்தில் பேசிய ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறினார்.

திரு. ஜெயவர்த்தன தொடர்ந்து கூறியதாவது:

"பிரதமரின் உறவினரான திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா, குற்றவியல் நீதி விசாரணை ஆணைக் குழுவினால் குற்றவாளியாகக்காணப்பட்டவர் இன்று சுதந்திரக்கட்சி அபேட்சகராகப் போட்டியிடுகின்றார். ஏன் விஜயவீரா மட்டும், சிறையில் இருக்க வேண்டும். அவர் ஒரு சிறிய மனிதர் என்பதே இதற்குக் காரணம்.

"இந்தியாவில் காங்கிரஸ் கட்சியின் சின்னமான பசுவையும் கன்றையும் மக்கள் ஒதுக்கி விட்டார்கள், அதேபோல் தான் இங்கும் திருமதி பண்டாரநாயக்காவுக்கும் நடக்கும்.

"நாம் ஆட்சிக்கு வந்ததும், ஊழலையும், கள்ளச்சந்தையையும் ஒழித்துக்கட்டுவோம். இதற்கு ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன். சலுசலா முன்னாள் அரசாங்க எம். பி. ஒருவருக்கு 50,000 யார் துணியை யார் 4 ரூபா 50சதமாக விற்றது. அவர், அத்துணியை கறுப்பு சந்தைக்காரருக்கு யார் 8 ரூபா 50 சதமாக விற்றிருக்கிறார். இதன் மூலம் 200, 000 ரூபா பெற்றிருக்கிறார். கறுப்புச்சந்தைக்காரர் அத் துணியைப் பாவனையாளருக்கு யார் 14 ரூபா 50 சதமாக விற்றிருக்கிறார். இப்படியான ஊழல்களுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

"எம். பி. ஒருவர் லஞ்சக் குற்றச்சாட்டில் சிக்கினால், அல்லது மது அருந்திவிட்டு வந்தால் அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஊழலில் சிக்கியவர்களின் பெயர்களை வெளியிட பத்திரிகைகளுக்குப் பூரணசுதந்திரம் வழங்கப்படும். (க-அ)


வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி- சரோஜாதேவி
வளர்பிறை

3-வது வாரம்
நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-3.
சனி ஞாயிறு 2-30
சிவாஜி—விஜயா
நடித்த
தங்கப்பதக்கம்

கடைசி வாரம்
புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன் - சுஜாதா
வாழ்ந்து காட்டுகிறேன்


## சோலைவரி அறிவித்தல்

### நகரசபை பருத்தித்துறை.

1977-ம் ஆண்டு 2-ம் கந்தாயச் சோலைவரிப் பணம் செலுத்த வேண்டிய திகதி 30-6-77-ந் திகதியிலிருந்து 28-7-77 திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளது. இத்திகதிக்குப் பின் செலுத்தும் வரிப் பணங்களுக்குப் பற்றுணைக் கட்டணமாக 10% அறவிடப்படுமென்பதை இத்தால் அறிபத்தருகின்றேன்.

மு. ம. தணிகாசலம்,
செயலாளர்,
நகரசபை,
பருத்தித்துறை.

நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை,
27-6-77. 6590


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


## வரி விளம்பரம்

### தேவை

அச்சகத்திற்கு அனுபவமுள்ள மெசின் மைன்டர் தேவை. விபரங்களுக்கு: திருமால் அச்சகம், முள்ளானை, இளவாலை. 6586

பெண் காசாளர் தேவை. ஆங்கில அறிவுடன் எண்கணிதத்தில் திறமையுள்ளவராகவும் இருத்தல் வேண்டும். சொந்த கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 6585, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 6585

சுவீடன் நாட்டைச் சேர்ந்த இருவருக்கு சித்தன்கேணியில் அல்லது யாழ்ப்பாணத்திற்கும், காரைநகர் சீநோர் ஸ்தாபனத்திற்கும் இடையில் வீடு தண்ணீர் மின்சார வசதிகளுடன் வாடகைக்கு தேவை. விபரங்களுக்கு: S. Larsson, சீநோர், காரைநகர். 6587

குடியிருப்பதற்கு சகல வசதிகளுடன் வீடு வளவு அல்லது வீடு கட்டக்கூடிய காணி 5-8 பரப்பு வரை தேவை. உரும்பராய், மருதனமடம் அல்லது உடுவில் எல்லைக்குள் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்கவும். பொ. சிறீநடராஜ், சீடில்ஸ், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 6575

## கேள்வி விளம்பரம்

### முள்ளிப்பற்றுக் கிராமாட்சி மன்றம் இயக்கச்சி.

கீழ்க்காணப்படும்வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 28-07-77 காலை 10-00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களை ரூபா 100/- வைப்புப்பணமாகவும், மீளளிக்கப் படாத பத்திரப்பணமாக ரூபா 15/-ம் செலுத்தி 27-07-77 நண்பகல் 12-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

1 சங்கத்தார்வயல் அம்மன்கோவிலடி வீதி அமைத்தல். ரூபா 15,000/-

2. சங்கத்தார்வயல் அம்மன் கோவிலடி வீதிக்கு கனி போடல். ரூபா 5,000/-.

மேலதிக விபரங்களை சபைக் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

க. கனகரத்தினம்
ஜே. பி.,
தலைவர்,
முள்ளிப்பற்றுக்
கிராமாட்சி மன்றம்,
இயக்கச்சி.

முள்ளிப்பற்று
கிராமாட்சி மன்றக்
காரியாலயம்,
இயக்கச்சி,
29-06-77. 6591

## பொருளாதார

[4ம் பக்கத் தொடர்ச்சி]

...த்திற்கு பொது மக்களும், பொதுஸ்தாபனங்களும் உதவ வேண்டுமெனறார்.

இதுவரை தாம் மேற்கொண்ட செயல் திட்டத்தின் நடவடிக்கைகள் பற்றி செல்வன் சு. சுரேந்திரன் அறிக்கை வெளியிட்டார். இக்கருத்தரங்கில் திரு மு. சிவபாதம், திரு. ... இராசரத்தினம், செல்வி ஞா. பவானி ஆகியோரும் உரையாற்றினர். (கெ-)

ஈழநாடு
The EELANADU

# "பென்சிலால் மட்டுமே புள்ளி இடுங்கள்"

## இளைஞர்களுக்கு வண்ணை ஆனந்தன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன்

"தமிழர்களின் இதயம் போன்றது தமிழர் விடுதலைக் கூட்டணி. 21ம் திகதி தமிழ் மக்கள் அளிக்கும் வாக்குகள் 72ம் ஆண்டுமுதல் தமிழர் விடுதலைக் கூட்டணி சாதித்தவைகள் சரியா பிழையா என்பதை அங்கீகரிக்கும்வாக்குகள் இதனை உணர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும். 21ம் திகதி தளிப்பட்ட யோகேஸ்வரனின் வெற்றியை அல்ல உதயசூரியனின் வெற்றியையே உலகு அவதானிக்கிறது"

இவ்வாறு யாழ் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் சட்டத்தரணி வெ. யோகேஸ்வரன் அடப்பன் வீதியில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். கூட்டம் ஆரம்பமாவதற்குமுன் தமிழ் இளைஞர் பேரவையைச்சேர்ந்த யோ அ. துரைராஜாவின் இல்லத்தில் 4ம்வட்டாரக் கிளையை திரு. யோகேஸ்வரன் குத்து விளக்கேற்றிவைக்க திரு. அலோசியஸ திறந்துவைத்தார்.

திரு. வண்ணை ஆனந்தன் பேசுகையில், உணர்ச்சி மிகுதியால் சிலர் வாக்குச்சீட்டில் இரத்தத்தால் அடையாளம் இடுவதுண்டென்றும் வாக்குச் சீட்டைமடித்துப் பெட்டிக்குள் போடுகையில் இரத்தம் பல இடங்களில்பட்டு வாக்குச் சீட்டுக்கழிக்கப்பட்டுவிடுமென்றும் எனவே வாலிபர்கள் வாக்குச் சீட்டில் அடையாளம் இடுகையில் தயவுசெய்து பென்சிலால் புள்ளடி இடவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் சட்டத்தரணி ஏ விஸ்வநாதன், பொன் மதிமுகராசா, யோ. அ. துரைராசா, சுந்தரலிங்கம், வாமதேவன், எஸ். தேவராசா, திரு. தர்மரத்தினம், மானிப்பாய் வேட்பாளர் திரு. வி. தர்மலிங்கம் உட்படப் பலர் பேசினர் இக்கூட்டத்தில் திரு. அழகராசாவால் காசுமாலையும் வேறு ஒரு அன்பரால் சொக்கிலேற் மாலையும் சூட்டப்பட்டன. [கி-அ]

## கனடா பயணம்

யாழ்ப்பாணம், புதன்

தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த பொன். சத்தியசீலன் கனடா பயணமானார்.

உரும்பராயைச் சேர்ந்த இவர் செங்குந்தா இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று பின்னர் இலங்கைப் பல்கலைக்கழக பேராதனை வளாகத்தில் பீ. ஏ. பட்டம் பெற்றார்.

பின்னர் அவசரகாலச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு நான்காண்டுகளுக்கு மேலாக சிறைஇருந்த இவர் அண்மையில் விடுதலை செய்யப்பட்டார்.

தற்போது கனடா மக்களின் அழைப்பை ஏற்று இவர் அங்கு பயணமானார். அங்கும் திரு. பொன். சத்தியசீலன் இயக்க வேலைகளில் ஈடுபடுவார் எனத்தெரியவருகிறது.

தமிழ்மாணவப் பேரவையை ஆரம்பித்த இவர் தமிழ் ஈழக் கொள்கைக்காகச் சிறைசென்ற இளைஞர்களுள் மிக நீண்ட நாட்கள் சிறையில் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



வேலர்: வேட்பாளர் பொடியன் எங்கவீட்டிலை கஷ்டப்பட்டுப்போச்சு!
மயிலர்: ஏன் வீட்டிலை ஆரும் எதிர்க்கட்சியோ.
வேலர்: இல்லை. பாயிலை இருந்து பழகாத பொடியன் பாயிலை சப்பாணிகட்டிக்கொண்டிருந்திது. காலை சரணவா ம் பிடிச்சு இழுத்துப்போட்டுது.
மணியம்: பாவம் ... வோட்டுக்காக தம்மை மடக்கி மடக்கி எடுக்குதுகள்.

— சுந்தர்

# கம்யூனிஸ்ட் - சுதந்திரா கூட்டாட்சி வருமாம்

## சரத் கூறுகிறார்

கொழும்பு, செவ்.

இன்னுமொரு கட்சியின் ஆதரவின்றி தனித்து ஆட்சி அமைக்க முடியும் என்று ஏதாவது ஒரு கட்சி நினைத்தால் அதைவிட வேடிக்கை எதுவும் இல்லை.

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சி வாலிப முன்னணித் தலைவர் திரு. சரத் முத்தெட்டுவேகம கூறினார்.

இடதுசாரி ஐக்கிய முன்னணி அபேட்சகராக கலவானைத்தொகுதியில் போட்டியிடும் திரு. முத்தெட்டுவேகம அயகமவில் நடைபெற்ற கூட்டத்தில் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எதிர்வரும் தேர்தலில் எந்த ஒரு கட்சிக்கும் ஆட்சி அமைக்கக்கூடிய பலம் ஏற்படப்போவதில்லை. இதே வேளையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரி ஐக்கிய முன்னணியும் இணைந்து ஒரு கூட்டு அரசாங்கத்தை அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பலர் இப்போது விலகி சுதந்திரக் கட்சியிலும் இடதுசாரி ஐக்கிய முன்னணியிலும் சேர்ந்துவருகின்றனர். ஐ. தே. க.வின் சகாப்தம் இம்மாதம் 21 ம் திகதி நள்ளிரவுடன் முடிவடைந்துவிடும்.

22 ம் திகதி சுதந்திரக் கட்சியும் இடதுசாரி ஐக்கிய முன்னணியும் இணைந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்று சுதந்திரக் கட்சியினால் உருவாக்கப்பட்ட பல நல்ல திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றுவோம். இந்நிலை நிச்சயம் வந்தேதீரும்.

### கருத்து வேறுபாடு கிடையாது

கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சுதந்திரக் கட்சிக்குமிடையே எதுவித கருத்துவேறுபாடும் கிடையாது. சுதந்திரக் கட்சிக்குள் இருந்த வலதுசாரிப் போக்கு உடையவர்களினாலேயே நமக்கிடையே வேறுபாடு ஏற்பட்டது. (இ)

## சிறுபான்மை—

[2ம் பக்கத் தொடர்ச்சி]

தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றி இன்று ஓரளவு பாதுகாப்பைச் சிறுபான்மை இனத்திற்கு வழங்கியது இலங்கைத் தமிழரசுக்கட்சி ஒன்றே என்பதை நாம் மறக்கக் கூடாது.

தமிழ்மக்கள் உதயசூரியனுக்கு எதிராக வாக்களிப்பதாயின் - தனித்தமிழ் நாட்டிற்கு எதிராக இயங்கி எங்கள் விடுதலைப்போராட்டத்தை 50 ஆண்டுகளுக்கு பின்தள்ளி விடுவார்கள் எங்கள் இளைஞர்களின் உணர்ச்சியை அவ்வளவு நீண்டகாலத்திற்குக் கட்டுப்படுத்தமுடியாது. அவ்வளவு நீண்டகாலத்தில் எமது நிலம்-மொழி-பண்பாடு-கலாச்சாரம் அனைத்தும் பறிக்கப்பட்டுவிடும். எனவே எமதுபோராட்டத்தை 50 ஆண்டுகள் பின்தங்க தமிழ்மக்கள் இடமளிக்கக்கூடாது. இந்தியாவில் வடக்கில் சுதந்திரத் தீ மூண்ட பின்பே தென் இந்தியாவில்இருண்டமயக்கத்தைக் காணக்கூடியதாக இருந்தது. இதனைக் கண்டு பாரதி துடித்தெழுந்து கவிதைமழை பொழிந்து விடுதலைத்தியை மூட்டினான். அவனது கவிதைகளில் சமூக உணர்வு சிறந்து விளங்குவதைக் காணலாம். இச் சமூக உணர்வு - சகோதரத்துவ விடுதலை - சாதியின் அழிவுதான் விடுதலையின் முதற்படி என்பதைக் காட்டுகிறது. இதனை மறவாது சிறுபான்மைத்தமிழ் மக்களாயிருந்தாலும்சரிபெரும்பான்மைத் தமிழ்மக்களாய் இருந்தாலும்சரி நாம் தமிழர் என்ற உணர்வுடன் உதயசூரியனுக்குவாக்களித்து யோகேஸ்வரனை வெற்றியீட்டச் செய்ய வேண்டும்' என்றார்.

இக்கூட்டத்தில் யாழ். தொகுதிவேட்பாளர் யோகேஸ்வரன் - கோப்பாய்த் தொகுதி வேட்பாளர் கதிரவேலுப் பிள்ளை, வண்ணை ஆனந்தன், செல்வி செந்தில்சித்ரா, முன்னாள்உதவிமேயர்என்.டி. செல்லத்துரை உட்படப் பலர் சொற்பொழிவாற்றினர்கள். (கி)

## குமார் கூறும் விளக்கம்

4-7-77 "ஈழநாடு" பத்திரிகையில்முதல் பக்கத்தில் "கூட்டணியினர் தமிழரைஏமாற்றப் பார்க்கிறார்களா?" என்ற தலைப்பில் ஒரு செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு கூட்டத்தில் நான் மு.சிவசிதம்பரம் எனனை ஓர் "கோமாளி" என்று சொன்னார் என்று பிரசுரமாயுள்ளது. நான் இன்னொருவருடைய பெயரை பிரஸ்தாபிக்கும் போதுதிரு.மு.சிவசிதம்பரம் குறுக்கிட்டு, அந்த நபரை நாம் பொருட்படுத்துவதில்லை அவர் ஒரு கோமாளி என்று சொன்னார் என்றுதான் கூறினேன்.

அதே பக்கத்தில் "எனது நேர்முகப் பரீட்சையின் பின்பு.....................நினைக்கின்றேன்" என்பது வரை நான் கூறவில்லை. நான் கூறியது-மறுநாள் (15-5-77) காலை 7-30 மணி தொடக்கம் பகல்12மணி வரை திரு.திருநாவுக்கரசு திரு. மு.சிவசிதம்பரத்தின் இல்லத்தில் இருந்தார் என்பதுதான்.

# யாழ். இந்து வெற்றி

யாழ்ப்பாணம்.புதன்

அகில இலங்கை ('பி'டிவிஷன்) கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி இவ்வருட சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இச் சுற்றுப்போட்டி மொறட்டுவ சென்.செபஸ்தியன் கல்லூரியில் நடைபெற்றது.

இச் சுற்றுப்போட்டியில் முதலில் குருநாகலை சென் ஆனஸ் கல்லூரியுடன் மோதியதில் தோல்விகண்ட இந்துக் கல்லூரி, பின்னர் அம்பலாங்கொட தர்மசோகா, கொழும்பு ஆனந்தா கல்லூரி ஆகியவற்றுடன் மோதியதில் பெரும் வெற்றிகண்டு இறுதியில் மீண்டும் குருநாகல் சென் ஆன்ஸ் கல்லூரியுடன் மோதியபோது 44-78 புள்ளி வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

## யாருடையது?

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள ராஜாகிறீம் ஹவுஸில் கண்டெடுக்கப்பட்ட சாரதி லைசென்ஸ் ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவு

## 'அமைச்சராக இருந்தபோது

# ஜே. ஆர். பிரச்னைகளை ஏன் தீர்க்கவில்லை?

மல்வானை, செவ்

கண் சிகிச்சைக்காக நான் லண்டன் சென்றிருந்தசமயம் தொம்பேயிலுள்ள ஐக்கியதேசியக்கட்சியினர், மக்களைவிட்டு நான் ஓடிவிட்டதாகக் கூறினார்கள். ஐக்கியதேசியக் கட்சிக்குப் போட்டியிருக்காது என்று எண்ணினார்கள்.

உடுப்பிலையில் நடந்தேறிய தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய கூட்டுறவு அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மேலும் கூறியதாவது, நான் லண்டனிலிருந்து திரும்பிவந்ததும், ஐ தே கட்சியினர் தங்கள் எண்ணத்தை மாற்றிக்கொண்டனர். இன்று என்னுடன் கடுமையாகப் போட்டிபோடுகின்றனர்

ஐ. தே. கட்சியின் லட்சியம், சோஷலிசம் என திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறுகிறார். அவரிடம ஒரு திட்டம் இருப்பதாகவும் கூறுகின்றார். ஆனால் அவர் முன்பு அமைச்சராக இருந்தபோது இப்பிரச்னைகளைத் தீர்க்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## செம்மணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அநுராதபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றவேண்டுமென்று திண்ணப்பம் செய்தார்.

இதனை ஏற்றுக் கொண்ட நீதிபதி வழக்கை அநுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்குமாற்றி எதிரியை இம்மாதம்27ம் தேதி அநுராதபுரம் மேல்நீதி மன்றத்தில் ஆரஜராகும்படி உத்தரவிட்டு, 1000பிணையில் செல்ல அனுமதித்தார். (க)

## பாகிஸ்தான்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சிகள் பல ஆர்ப்பாட்டங்களை நடத்தியதில் 200க்கு மேற்பட்டோர் மரணமடைந்ததும் பெரும் பொருட்சேதம் ஏற்பட்டதும் தெரிந்ததே.

1971ம் ஆண்டு முதல் 73ம் ஆண்டுவரை ஜனதிபதியாக இருந்த ஜனப் பூட்டோ, 73-ம் ஆண்டுமுதல் பிரதம மந்திரியாக இருந்துவந்தார். (இ)

## மாவட்ட—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஹாலி-எலவில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ஜெயவர்த்தன மேலும் கூறியதாவது:- ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்குவந்ததும், எந்த எம். பி யையும், சரி சமனாகவே கவனிக்கும். எதிர்க் கட்சி எம். பி.க்களுக்கு எவ்வித பாகுபாடும் காட்டமாட்டோம். எதிர்க் கட்சியினரை, ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தையும், பத்திரிகைகளையும் பிரசாரத்திற்குப் பாவிக்க அனுமதி அளிப்பதுமட்டுமன்றி, அடுத்த தேர்தல் பிரசாரத்திற்கு எதிர்க்கட்சியினருக்கு தேர்தல் நிதி ஒதுக்குவோம்.

நாம் ஆட்சிக்கு வந்ததும், முதலாளிகளின் நன்மைக்காகப் பாடுபடமாட்டோம்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தா[ர்] யாழ்ப்பாணம் வெலிகோனில் மேலைவீதி 68-ம் இலக்க[த்]திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389 Registered as a News paper in